# வேளாளன்

தூத்துக்குடி

ஆசிரியன்:— மு. பொன்னம்பலம்.

வயது 1] 1104-ளு சுக்ல-ஹு சித்திரைமீ 9-உ [மாதம் 1


"அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கிவிட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

---

## ந[redacted]வேளாளனும் எமது வேண்டுதலும்.

நம் நாட்டில் ஒவ்வொரு ஜாதியினரும் சங்கங்கள் ஸ்தாபித்தும், பத்திரிகைகள் நடத்தியும் முன்னேற்றமடைந்து வருகின்றனர். சங்கங்களாலும், பத்திரிகைகளாலும் பயனதிகமென்பது யாவரும் அறிந்ததே. ஒருவராக ஒருவிஷயத்தைச் சொல்லுவதைப்பார்க்கிலும் சங்கங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் சொல்லுதல் மிகமிகப் பயன்பெறுகின்றது. சங்கங்கள் கூட்டவும், சங்கங்களைச்செவ்வனே நடத்தவும் இன்றியமையாது வேண்டப்படுவது பத்திரிகையே. பத்திரிகையின் சக்தியை அன்னிய நாட்டார் அறிந்திருப்பதுபோல் நம்மவர்கள் அறிவதில்லை. பத்திரிகை யென்பது உயர்ந்த கல்விமான்களால் சாஸ்திர விஷய சாரங்களையும், உலக விவகாரங்களையும், தொழில் முறைகளையும், அவ்வப்போது நடக்கிற வர்த்தமானங்களையும், பிறவிடங்களில் நடக்கிற விஷயங்களையும், ஆராய்ந்தறிந்தெழுதுவதே. தற்காலத்

தில் நம் நாட்டில் பத்திரிகையின் அபார சக்தியை அறிந்து வகுப்பினர்கள் தங்கள் வகுப்பு முன்னேற்றங்கருதி பத்திரிகைகள் நடத்தி அதன் மூலம் தங்கள் முன்னேற்றத்திற்கு வேண்டும் விஷயங்களை எழுதிப் பயன்பெறுகின்றனர். இந்த நிலைமையில் நம் வகுப்பினர் மட்டும் எல்லாம் உடையோம் நாம் என நினைந்து இறுமாந்து, இருப்பவற்றை எல்லாம் இழந்துவருகின்றோம். சுருங்கச் சொல்லின் அரசியற்றுறையை ஒரு வகுப்பினரும், தொழில்த் துறையை மற்றொரு வகுப்பினரும் கைப்பற்றிக்கொள்ளவும நமக்குரிய தொழிலாம் உழவு தொழிலையும, ஒதுக்கிவிட்டு ஓலமிட்டலரும் நிலையிலிருக்கின்றோம். இனியாகிலும் காலநிலையை அனுசரித்து அதற்கேற்றவாறு, எல்லாமிருப்பினும, இருப்பவைகளை இழக்காமல் காத்துக்கொள்ள வேண்டியதவசிய காத்துக்கொள்வதற்கு சாதனங்கள் பல விருப்பினும் அவ்வனைத்திற்கும் ஆதாரமாக விருப்பது பத்திரிகையே.

ஆனதால், அறிவாற்றல் முதலிய அனைத்திலும் சிறியேனாகிய அடியேன் வேளாளர் முன்னேற்றங்கருதி "வேளாளன்" என்னும் பெயருடன் விரிந்த நோக்கங்கொண்டு மாதமொருமுறைப் பத்திரிகை நடத்த முன்வந்துள்ளேன். பத்திரிகை நடத்த வேண்டுமென்ற எண்ணம் என்னுள்ளத் துதித்துப் பல்லாண்டுகளாயினெனினும என்னை ஊக்கப்படுத்துவார் ஒருவருமில்லாது ஒதுங்கியிருந்தேன். பின்னர், என் உள்ளக்கிடக்கையை உலகறிய வேண்டி ஓர் விண்ணபபம் விடுத்தேன். அதனை அறிந்த அன்பர்கள் பலர் ஆங்காங்கிருந்து ஆர்டர்கள் அனுப்பியும், ஆதரவுகள் கொடுத்தும ஆர்வத்துடன் ஆதரித்துவருகின்றனர். அதனை அறிந்த அடியேன் இனிச் சும்மாவிருத்தல் சுகமில்லை எனக்கருதி நம் நகர் நவமணி, நம் சமூகத்தலைவர், கனம், சி. வ நல்லபெருமாள்பிள்ளையவர்களிடம் என் உள்ளக்கிடக்கையையும், அதனை அறிந்த அன்பர்கள் பலர் ஆதரவுக் கடிதங்களையும் தெரிவித்தேன். பிள்ளையவர்களும் நல்லபிப்பிராயமும், ஆசியுங்கூறி ஆதரவுகள் பல தந்து ஆதரித்திருத்தலோடு இன்னும் வேணடுவன செய்வதாய் மனமுவந்து கூறி நன்கொடையாக நூற்றி ஒரு ரூபாய் கொடுத்துதவினர்கள்.

அனைவர்கள் நம் சமூக நலங்கருதித்தந்துள்ள ஆதரவுகளை நாம் என்றும் எண்ணுதற்குறியதே. மற்றும் பல கனவான்களும் ஆதரவும், ஆசியுந் தருகின்றனர். ஆகையால் அடியேன் புது வருடம் புண்ணிய தினம் ஆதிவாரமாகிய இந்நன்னாளில் "வேளாளனை" வெளிவந்துலாவச் செய்கின்றேன் "வேளாளன்" இடையூறின்றி இனிது நடைபெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிதலோடு சமூக கனவான்களனைவரும் அடியேனிடம் குற்றம் பல காணினும் அவைகளைப்பொறுத்து அவரவர்கள் ஆற்றலுக்கேற்பச் சந்தாதார்களாகவும், நன்கொடையாளிகளாகவும், கட்டுரையாளர்களாகவும் கலந்து வேண்டுவனசெய்ய வினயத்துடன் விண்ணப்பிக்கின்றேன். "என் கடன் பணிசெய்துகிடப்பதே" என்ற அப்பர் அருள்மொழிக்கிணங்க அடியேன் "வேளாளன்" மூலம் வேண்டும் பணி யியற்ற முன்வந்துள்ளேன். "நும் கடன் அடியேனையுந் தாங்குதல்" என்றவாறு வேளாளரனைவரும் என் பணி இடையூறின்றி இனிது என்றும் நிலவிபர அடியேனை அனேக வழிகளால் ஆதரிக்கவேண்டுகின்றேன். விரிந்த நோக்கத்துடன் வெளிவரும் நம் "வேளாளன்" வீடுதோறும் விளங்குதற்கு வேளாளர் பலர் விரைந்து வேலைசெய்யவேண்டும். என் கடனை யான் இயற்றத் துடங்கிவிட்டேன். உங்கள் கடனை நீங்கள் ஒவ்வொருவரும் ஓய்வின்றி ஊக்கத்துடன் செய்வீர்களென்பது என் நம்பிக்கை. அடியேன் நம்பிக்கை அவலம்போகாமல் அன்பர்கள் ஆர்வத்துடன் ஆதரிக்கவும், ஆண்டவன் அருள்புரியவும், அன்பர்களையும், ஆண்டவனையும் அன்புடன் வேண்டுகின்றேன். சுபம் சுபம்.

———:():———

ஒவ்வொரு வேளாளரும் ஒவ்வொரு சந்தாதாரைச் சேர்த்தால் தங்கள் கடமையைச் செய்தவர்களாவார்கள். இஃது கஷ்டமில்லாத கடமை.

## நீதி மொழி.

பலருக்கு உபயோகப்படும் பழம் பழுக்கும் மரம் ஊரின் பொதுவிடத்திருந்து உபயோகப்படுவதுபோல். பணம் பெற்று வாழும் மனிதர்கள் யாருக்கும் உபயோகமாக வாழவேண்டும்

# குறிப்புகள்.

—:():—

## வேளாளர்சங்கம்வேண்டுவதே.

வேளாளர்கள் வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலியவைகளில் விருத்தியடைந்து வருவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது சங்கமே. இதனை உணர்ந்த நம்மக்கள் சிலமாதங்களுக்கு முன்னர் வேளாளர்சங்கம் ஸ்தாபித்து, முதற்கூட்டம் தூத்துக்குடி திருவாளர் சி. வ. நல்லபெருமாள் பிள்ளையவர்கள் வீட்டில் கூட்டிவைத்தார்கள். சங்கநிர்காகத்திற்காக திருவாளர்கள் சி. வ. அவர்கள், பி. வி கணபதியப்ப பிள்ளையவர்கள், அம்பாசமுத்திரம், சிவஞானம் பிள்ளையவர்கள் முதலிய கனதனவான்களை நியமித்தனர். மறுகூட்டம் பெப்ரவரிமீ கடத்துவதாய்த் தீர்மானித்தார்கள். குறித்தகாலத்தில் கூட்டங்கூட வசதியில்லாமல் மார்ச்சுமீ இறுதியில் திருநெல்வேலி வண்ணார்பேட்டையில் கூடுவதாய்த் தீர்மானித்தும் . கூட்டத்திறகு முக்கியமானவர்களில் சிலர் வராததால் கூட்டங் கூடவில்லையெனத் தெரிகின்றோம். இனியேனும் முக்கியஸ்தர்கள் முனைந்து நின்று வேலைசெய்து வேளாளர்களை விரைவில் முன்னேறச்செய்ய முயல்வார்களாக.

## நமது "வேளாளன்" பத்திரிகை

வேளாளனைப்பற்றி விளம்பரஞ்செய்ததைக் கண்ணுற்ற நம் கண்மணிகளாகிய சிங்கப்பூர், திரு. கே. நாகமுத்து அவர்கள் யம். யன். நாயுடு அண்டு சன்ஸ் மனேஜரவர்கள் (Liutoba, f+j1) முதலிய பல்லோர்கள் முன்பணமனுப்பியும், வேறுபலரைச் சந்தாதார்களாகச் சேர்த்து அனுப்பி ஆதரித்த அன்னவர்களின் அன்பின் திறத்தைப் பெரிதும் பாராட்டுதலோடு; உத்தமபாளயந்தாலுகா கொத்தப்பட்டி தலைமைஉபாத்தியாயர் திரு. பி, வைகுண்டராம பிள்ளையவர்கள், மதுரை திரு. சு. சிதம்பர ஓதுவாமூர்த்திகள், குழச்சல் உபாத்தியாயர் திரு. பி. சிதம்பரதாணுபிள்ளை யவர்கள் வடிவீசுரம் தொண்டரமைச்சர் திரு. கெ. ஆறுமுகம்பிள்ளை யவர்கள், இலங்கைத் திரு. எம். கே. கணபதிபிள்ளை யவர்கள்,

காலி திரு. ச. முருகையாபிள்ளையவர்கள, மன்னார்குடி அமிர்தகவி திரு.ஜே. இராஜகோபால் பிள்ளையவர்கள்முதலிய பல்லோர்கள் பத்திரிகைக்கு வலிந்து சந்தாதாராய்ச் சேர்ந்தும், வேறுபலரைசேர்த்தும் சேர்ப்பதாயும் அன்புடன் ஆதரவு தந்தமைகுறித்து அகமகிழ்கின்றோம். அன்னவர்கள் அனுப்பிய கடிதங்களனைத்தையும் வெளியிடின் விரியுமென்று அஞ்சி விடுக்கின்றோமாதலின் அன்னவர்களனைவரும் அன்புடன் மன்னிப்பார்களாக. வேளாளனைச் சென்ற ஆவணியில் வெளியிடக்கருதினோம். வேலைமிகுதியால் வெளியிடமுடியாமற் போயிற்று. பின்னர் தையில் வெளியிடுவதாய் விண்ணப்பத்தில் விடுத்திருந்தோம விண்ணப்பத்தில் விடுத்தபடி விரைந்து சந்தாதார்கள் சேரவில்லை யாதலால் வெளியிடயியலாதுபோயிற்று. பலர் பத்திரிகை வெளிவந்ததும் வேண்டுவன செய்கின்றோமென விருப்பத்துடன் கூறினர். ஆதலின் இனித்தாமதித்தல் தகுதிஇல்லையெனக் கருதி இதுபொழுது வெளியிடத்துணிந்தேன். காலந்தாழ்ந்தமை குறித்து நேயர்கள் வருந்தாமல் மன்னிப்பார்களாக.

## வேளாளனுக்கு வேண்டுவனசெய்யும் விதேயன்.

பத்திரிகைத்தொழிலிலபழக்கமில்லாத நாம் பத்திரிகைநடத்த முன்வந்துள்ளோம். உடல்வன்மையும் பெற்றிலோம. இத்தநிலைமையில் நமது நண்பர் நாராயணபிள்ளை கடிதமுதலியவைகள் பல எழுதியும், பலரைக்கண்டு வேண்டுவன செய்தும், இன்னோரன்ன பல செய்தமைக்கும், செய்கின்றமைக்கும, நாம நன்றி பாராட்டுதலோடு அவரளவிடயமில்லா ஊக்கத்தை ஒருபொழுதும் மறக்க இயலாது.

## லண்டன்நகர் நண்ணிய நம்மவர்கள்.

தூத்துக்குடி திருவாளர் சி. வ. நல்லபெருமாள் பிள்ளையவர்களின் இளையமகன் திருவளர் செல்வர், ந. சண்முகசுந்தரம்பிள்ளை ஐ. சி. எஸ். பரீட்சைகொடுத்துவருவதற்காக மிக ஊக்கத்துடன் ஓரேநோக்கமாக லண்டன்நகரம் நண்ணியமை குறித்து நாம் பாராட்டுதலோடு ஆங்குபற்பல விடங்களுக்குஞ் சென்று சுற்றுப்பிரயாணஞ் சுறுசுறுப்பாய்ச்செய்து லண்டன் வந்தமை குறித்து

மெச்சுகின்றோம். எல்லாம்வல்ல இறைவன் அவர்பரீட்சையில் தேர வும், பண்புடன் பற்பலசெய்யவும் அருள்புரிவாராக. தூத்துக்குடியில்சிலவருடங்களுக்குமுன்னர் டாக்டராகவிருந்த நமது அறியதோழர் பாளையங்கோட்டை, திரு. அண்ணாமலைப்பிள்ளையவர்களும் வைத்தியப்பரீட்சையில் தேர்ச்சிபெற்றுவர லண்டன் நகரம் நண்ணியுள்ளார்கள். அன்னவர்களுக்கும் ஆண்டவன் வேண்டுவன கொடுத்து அருள்புரிவாராக. இவ்விருபெருமக்களும இளமைப்பருவத்தில் இல்லம்விட்டு இன்புறுமனைதுடன் அன்யநாடு சென்று ஆவர்வர்களுக்குறிய விஷயத்தில் தேர்ச்சிபெற்றுவர மிக ஊக்கத்துடன் முன்வந்தது வேளாளர் சமூகத்திற்கு பெரும்பயன்தருவதாகுமெனக்கருதுகின்றோம்.

பெருநோக்குடைய பெரியார்.

நமது வேளாளன் வீடுதோறும் விளங்குதற்கு வேண்டுவன செய்வதாய் விருப்பத்துடன் விடையளித்து கனவான்கள் பலருக்கு கடிதங்கள் கொடுத்து காருண்யத்துடன் பத்திரிகாலபத்திறப்புவிழாத்தலைவராக இசைந்துள்ள தூத்துக்குடித் தாலுகாபோர்டு தலைவராக ஸ்ரீவைகுண்டத்தில் வாழ்ந்துவரும் வெள்ளூர்த் திருவாளர் ஆ. சங்கரலிங்கக்கவிராயரவர்கள் சரீரஅசௌக்கியமாகயிருப்பினும் ஆர்வத்துடன் ஆதரிக்கமுன்வந்ததைக் குறித்து அன்புடன்பாராட்டுகின்றோம். அன்னவர்கட்கு ஆண்டவன் நோயற்ற வாழ்வையும், குறைவற்றசெல்வத்தையும் கொடுத்தருளப்பிரார்த்திக்கின்றோம்.

மெச்சுகின்றோம்.

தூத்துக்குடி திருவாளர் C. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் ஆங்கிலப்பரீட்சையில் பட்டம்பெற்ற பலரினும் பன்மடங்கு அதிகாரமபெற்று வாழ்கின்றனர். தற்பொழுது பிள்ளையவர்களுக்கு ரூபாய்ஆயிரம் சம்பளமென அறிகின்றோம. இன்னும் சில மாதங்களில் உத்தியோகத்தினின்றும் விலகி ஓய்வெடுத்துக் கொள்ளப்போவதாய் அறிகின்றோம். ஓய்வுகாலமுதல் ரூபாய் மூன்று

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41


ற்றுஐம்பது பென்ஷனாகப் பெறப்போகிறார்களாம். பிள்ளையவர்
களின் திறமையை அறிந்து உயரிய நிலையில்வைத்து ஆதரித்த
ஏ. அண்டு. யவ. ஆர்வி துரையவர்கள் அறிவுடைமையும், அன்
புடைமையும் போற்றற்குரியதே. பிள்ளையவர்கள் உத்தியோகத்தி
னின்றும் விலகி ஓய்வெடுத்தபின் வாழ்நாள்முழுதும் நம் சமூக
நலங்கருதியும் பொதுநலங் கருதியும் ஊக்கத்துடனுழைத்து புக
ழும் புண்ணியமும் பெற்றுவாழ விரும்புகின்றோம்.

சித்திரைத் திருநாள் சிறப்பு.

தூத்துக்குடி சிவாலயத்தில் சிறப்புடன் சித்திரைத்திருநாள்
நடக்கும் வழக்கம்போல் இவ்வருடமும் நடைபெறுகின்றது
அத்துடன் இவ்வருடமும் விசேஷமாக திருநெல்வேலி உயர்
திருவாளர் சுந்தர ஓதுவா மூர்த்திகள் தமிழ் வேத பாராயணம்
பக்க வாத்தியங்களுடன் நடத்திவருவதும் திருநெல்வேலி சுப்
பையாமேளமும் கேட்போருள்ளம் மகிழ்வதற்குரியதே. திரு.
ஓதுவாமூர்த்திகள் இரண்டு ஆண்டுகளாக வாராமலிருந்து இவ்வா
ண்டு வந்தமைகுறித்து மனமகிழ்ந்து வரவேற்கின்றோம். இவ்விர
ண்டு சிறப்புக்களையும்நடத்த முன்வந்துள்ள தர்மகர்த்தர் திருவாளர்
சி. ப. முத்துச்வாமிபிள்ளை யவர்களை வாழ்த்துகின்றோம். சமயத்
திற்கு அடிப்படை — ஆலயமென்பதை யறிந்த பிள்ளையவர்கள் ஆல
யத்தில் சமயப்பிரசங்கங்கள் நடத்திவைக்க முன்வந்ததுபற்றி
மகிழ்கின்றோம்.

புகழ்மிகுந்த புண்ணியச் செயல்

தூத்துக்குடியில் திரு சி. சு. வ. குடும்பத்தினர். காலஞ்செ
ன்ற திருவாளர் சி. சு. வ கிருஷ்ணபிள்ளையவர்களுக்கு வாரிசு இல்
லையாதலால் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களில் ஒரு
பகுதியை அவர்குடும்பத்தினர் பதி புண்ணியங்களில் ஒன்றாகிய
சிவபெருமானுக்குச் சிறந்த வாகனமாகிய இரஷப வாகனங்கள்
இரண்டையும் வெள்ளியில்செய்தும் பசு புண்ணியங்களிலொன்
றாகிய பெண்பாடசாலை ஒன்று நிறுவியும் இவ்விரண்டிற்கும் சுமார்
ரூ.-50000 ஐம்பதினாயிரம் வரை ஒதுக்கினதுபற்றி குடும்பத்தா

ரைப் பாராட்டுதலோடு இவ்விருபெருஞ்செயலுக்குப் பெருங்காரணராகவிருந்த திருவாளர் சி. சு. வ. சுப்பையாபிள்ளையவர்களைச் சிறப்பாகப் பாராட்டுகின்றோம்.

## திருவாங்கூர் திருநெறித் தொண்டர் குழாம்

திருவாங்கூர் சமஸ்தானத்தில் நாகர்கோவிலையடுத்த வடிவீசுரத்தில் நிறுவப்பெற்றுச் சில ஆண்டுகளாக நடைபெற்று வருகிற திருநெறித்தொண்டர் குழாம் இவ்வருடம் இரண்டாகப்பிரிந்து வேலைசெய்கின்றதென்று கேள்விப்படுகின்றோம். அஃது உண்மையானால் பிரிவினை பிறர்க்கு இகழ இடங்கொடுக்குமாதலால் இருசாராரும் இணங்கி "ஒன்றுபட்டாலுண்டுவாழ்வு" என்பதை சிந்தித்து நடப்பார்களாக.

## விடுமுறை

தூத்துக்குடியில் சென்ற பங்குனியில் கடைசி வெள்ளிக்கிழமை முதல் ஒவ்வொருமாசமும் கடைசி வெள்ளிக்கிழமைதோறும் இந்த ஜவுளிவியாபாரிகள் விடுமுறையாக ஓய்வெடுத்துக்கொள்ளத் தீர்மானித்தார்கள். பிறபல இடங்களில் இவ்விதம் நடைபெற்றுவருவது நாமறிவோம். இந்த ஜவுளிவியாபாரிகள் மாதம் ஒருநாளாவது விடுமுறை வேண்டுமென்பதை யுணர்ந்து அதனடி அனுபவத்தில் கொண்டுவந்ததைப்போல மற்ற எல்லா வியாபாரிகளும் இந்த ஜவுளி வியாபாரிகளின் நல்லமுறையை விரைவில்பின்பற்றுவார்களாக. கிருஷ்துவ சகோதரர்கள் எல்லாம் வாரம் ஒருமுறை விடுமுறை நாளாக உபயோகிப்பதை நேயர்கள் நினைப்பார்களாக.

பின்பற்றுவார்களாக — திரு சி. சு. வ. குடும்பத்தினரைப் போல பொருள்பெற்றுவாழும் புண்ணியவான்கள் புகழும்புண்ணியமும் பெறுவதற்குரிய தர்மங்கள் பலசெய்வார்களாக. நமது வேளாளன் என்றும் இடைவிடாது நிலவிவர யாராவது மூலதனம் வைத்து உதவுவார்களாக.

உ

# கணபதி வணக்கம்.

(இலங்கை திருவாளர் ச முருகையாபிள்ளை அவர்கள்)

நாம் தொடங்குங் காரியங்கள் விக்கினமின்றி நிறைவேறுதற்கு கணபதி வணக்கத்தையே கருத்தினில் கொள்ளவேண்டும் முதன் முதல் வெளிவரும் "வேளாளன்" பத்திரிகையும் என்றும் இனிது நடைபெறுதற்பொருட்டு அவரது வணக்கத்தைக்கொண்ட கட்டுரையை வரையலானேன்

சுந்தரம் — தாத்தா எங்கிருந்து வருகிறீர்?

தாத்தா — கணபதி கோவிலுக்குப் போய்விட்டு வருகிறேன்

சு — கணபதி யென்றாலென்ன பொருளென்னே?

தா — கணங்களுக்குப் பதியெனப்படுவர்

சு — விக்னேஸ்வரரென்று பாட்டி சொன்னாளே

தா — அப்படியும் சொல்வதுண்டு

சு — விக்னேஸ்வரரென்று சொல்வானேன்

தா — விக்கினங்களை நீக்கி வைப்பாராதலால்

சு — பாட்டி வேறுவிதமாய்ச் சொன்னாளே

தா — எப்படி?

சு — மோதகத்தை விழுங்கும்போது விக்கிக்கொண்டதால் பெயர் வந்ததென்று

தா — உனக்கு விளையாட்டாகச் சொல்லியிருக்கலாம்

சு — சரி, ஆனால் விநாயகரைக் கண்டவுடன் சிரசில் குட்டிக் கொள்வானேன்?

தா — இதற்குரிய வரலாற்றைச் சொல்லுகிறேன் கேள் முன்னொரு காலத்தில் இலங்கையை இராவணன் என்ற அசுரன் ஆண்டு

வந்தான். அவன் தீய குணமுடையோனாதலால் பலருக்கும் பல காலத்தில் துன்பம் விளைத்துவந்தான். இப்படியிருந்துவரும் நாளில் சாக்ஷாத் சிவபெருமான் வீற்றிருக்கும் வெள்ளியங்கிரிக்குச் சென்று தன்னை யொருவரும் வெல்லுதற்கிசையாதவாறு வரந்தர வேண்டுமென்று தவந்தாங்கி நின்றான். கருணைக்கடலாகிய நமது பெருமானும் அவனது தவத்திற்கிரங்கி பெருமை பொருந்திய சிவலிங்கமொன்றைக் கொடுத்து இந்த லிங்கத்தை நீ ஒருவித வாகனங்களின் மீதும் வையாது உனது கையிலேயே தாங்கிச் செல்ல வேண்டும். போகும்போது பூமியில் வைப்பாயேயானால் பின்பு அதனை எடுக்கவியலாது. இவ்விதம் உனது நகரத்திற் கொண்டுபோய்ச் சேர்த்துப் பிரதிட்டை செய்து பூஜித்து வருவாயேயானால் உன்னை யாவராலும் எக்காலத்தும் வெல்லமுடியாதென் றருளுவாராயினர் இராவணனும் அவ்வாறே லிங்கத்தை தாங்கிக்கொண்டு பூமியின் மார்க்கம் வரும்போது தேவர்களுக்கிது விபரந் தெரிந்து, இந்த லிங்கத்தையும் தந்நகருக்குக் கொண்டு சேர்த்து பூஜிப்பானேயானால் இவனை யொருகாலத்தும் வெல்லமுடியாது, இவனிழைக்கும் துன்பங்களையுந் தாங்கமுடியாதெனக் கருதி விக்னங்களைத் தீர்த்துவைக்கும் விநாயகப் பெருமானை வேண்டி இதற்கோருபாயஞ்செய்து தடுத்துக் காத்தருளப் பிரார்த்தித்து நின்றனர்.

விநாயகமூர்த்தியுந் தேவர் வேண்டுகோளுக் கிரங்கி தன்னைப் பொருட்டாயெண்ணாத இராவணன் போய்க்கொண்டிருக்கும் பாதையினோரத்தில் ஓர் அந்தணச் சிறுவன் வடிவங்கொண்டு நிற்பாராயினர். இதுசமயம் இராவணன் சிறுநீர் கழிக்க, அவசியமுடையவனாய், பாதையில் நிற்கும் அந்தணச் சிறுவனையழைத்து நான் ஜலபாதை செய்து ஓடிவருகிறேன் அதுவரை நீ இந்த லிங்கத்தை கீழே வைத்துவிடாமல் உனது கையில் வைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்று சொல்லவும், வைத்துக்கொள்வதிற் றடையில்லை, நீண்ட நேரம் என்றால் தாங்கிநிற்க முடியாது. உன்னை மூன்றுமுறை யழைப்பேன். நீயதற்குள் ஓடிவராதுபோனால் நான் கீழே வைத்துவிடுவேனென்று சொல்லி, லிங்கத்தை வாங்கிக் கொண்டு, இராவணன் சென்ற கணப்பொழுதிற்குள் இராவண

இராவணா! இராவணா! என்று மூன்றுமுறை யழைத்தும், இராவ ணன் வரவில்லையாதலால் இது இறைவனுடைய திருவிளையாட லெனக் கருதி மண்மீது லிங்கத்தை வைத்துவிட்டார்.

கடுகிவந்த இராவணனும் நிகழ்ந்ததையறிந்து நெருப்புப்பொறிபறக்கக் கோபித்து தனது இருபதுதோள் வலிமையைக்கொண்டு லிங்கத்தைத் தூக்கி எடுத்தும் மகா பலமுடையதாய் வேரூன்றி விட்டதால் அசைக்கமுடியாது போயிற்று. இதனால் இம்மூர்த்திக்கு மாபெல லிங்கமென்னும் பெயர் விளங்கலாயிற்று. மீண்டும் மீண்டும் பிடித்திழுக்க வழுக்கியும் நிமிர்ந்தும் பசுவினது செவியைப்போலிருந்தபடியால் கோகர்னம் என்று அவ்விடத்துக்குப் பெயருமாயிற்று. இதனையறிந்த இராவணன் பெரிதும் துன்புற்று மனங்கொதித்து பிராமணப்பிள்ளையாய் நின்ற குடுமியையுடைய விநாயகரது சிரசில் பலமாய்க் குட்டினான். குட்டிய மாத்திரத்தில், விநாயகப் பெருமானும் தமது விஸ்வ ரூபத்தைக்காட்டி யவனை யிருக்கிப் பிடிக்கவும் இராவணன் தாங்கமுடியாமல் அடியேன் அறியாமற் செய்த பிழையிது பொறுத்தருளல் வேண்டுமென்றும் விட்டுவிட வேண்டுமென்றும் கெஞ்சி நிற்கவும் அவனை விடுத்து உனது குற்றத்தைப் பொறுப்பதற்கு உனது பத்து சிரசும் வருந்தும்படி குட்டிக்கொள்ள வேண்டுமென்றருளவும் அதன்படியே தனது சிரத்தில் வலியுறக்குட்டி ஆனந்தக்கூத்தாடி நின்றான். இதனைக்கண்ட விநாயகர் மகிழ்ந்து அவனுக்கநுக்கிரகித்தும் இன்று முதல் எனதருளை விரும்புவோர் உன்னைப்போல் தமது காங்களினால் சிரசில் குட்டி பக்தி செய்வார்களேயானால் அவர்கட்குரிய எல்லா விக்கினங்களையும் தீர்த்துக் காத்து ரக்ஷிப்பேனென்று அருளியுள்ளாராதலால் நாமும் அவரதருளைப்பெற சிரசிற் குட்டிக் கொள்ளவேண்டும்; இதுதான் காரணம்.

சு.—தாததா விபாமறிந்தேன். கணேசப் பெருமான் சந்நிதியில் நானும் தங்களைப் போலவே சிரசினில் குட்டி வந்தனை வழிபாடுகளை பக்தியோடு செய்துகொள்கிறேன்.

# வேளாளர் மாண்பு.

(சென்னை, திருவாளா கா. சிவசங்கரமுதலியாரவாகள்)

திருககைலையில இறைவனும உமையமமையாரும மகிழந திருநத ஞான்று அமமையாா விளையாடடாயத தமது காஙகளால இறைவன கணகளைப பொததினா சனறகண்ணின வெபபததிற காறறுது அமமையாா கைகளில வோவையுண்டாய அது ஆறுகப பாயநதது. அதுதான கஙகை அதில வேளாளா பிறநதாாகள அதனால அவாகளுககுக கஙகை குலததாா எனறு பேர வழஙகு கிறது கமபரும இதை தமது ஏரெழுபதில

"கஙகைபெறுங காராளா கருவி யெழுபதுமுறைகக"

எனறு எழுதியிருக்கினறாா எனறு சிலா கூறுகின்றார்.

"கோக்களைக காததலு மாபபொருளீட்டலும
ஏர்தொழில மூனறும வைசியா தமதொழிலே"

என்று பிஙகலநதை நிகணடில கூறியிருககினற படியாலும ஏாத்தொழில் வேளாள ருககே யுரியதாதலாலும வேளாளா வைசியரே எனபாா சிலா.

இககாலததில தமிழ நாட்டில க்ஷததிரியருமிலலை வைசியருமி ல்லை வேளாளா சூததிராதான என்பா் சிலா.

பாாபபன மககள எஙகெந்த விடஙகளிற குடியேறினாகளோ அநதநத நாட்டுமொழியை தமககுரியமொழியாய் வழஙகுகிறாாகள வேளாளருள யாரேனும தமிழைத்தவிர வேறு மொழிபேச யாரே னும கணடேனும கேடடேனு மிருககிறோமா? ஒருகாலததில வட ககேயிருநத ஆரியரோடு போா புரிநது தமிழா மேருமலையில புலி கொடியும மேழிககொடியும நாடடினாாகள எனறு தெரிகினறது

"யுகமேழு கோடி யிருப திலககமு முளளமடடும
சகமேழு மேழும புகழே நிறுததித தமிழ புனைந்து

புகழ்மேழி விராகைப் பதாகையும் வீரப் புலிக்கொடியும்
மகமேருவிற் சென்று நீடிய தாலதொண்டை மண்டலமே"
என்ற பாட்டால் இது விளங்குகின்றது.

பிங்கலந்தையிற் கூறிய வைசியர்க்குரிய முத்தொழிலும் தமிழ் வேளாளர்க்குரியவையாவென சிறிது ஆராய்வோம். தமிழ் நாட்டில் திணை வகுத்த காலத்திலேயே ஆடுமாடுகளை மேய்த்து வேளாளருக்குதவிசெய்ய இடையரை வகுத்திருந்தமையால் கோக்களைக் காக்குந்தொழில் வேளாளருக்கில்லை "மெய்மையுங் கொடையும் வேளாண்மையாகும்" என்று பிங்கலந்தையிற் கூறியதாலும் பண்டமாற்றும் வாணிபத்தில் பொருளீட்டப்பொய் பேசாதிருக்க முடியாதாகலாலும் வாணிபத்தொழில் அவர்க்குரியதல்லவெனத் தோன்றுகின்றது.

"வேளாண் மாந்தர்க் குழுதூணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" என்று பொருளதிகார மரபியற் சூத்திரங்கூறியிருப்பதால் அவர்கள் உழவுத் தொழிலொன்றையே மேற்கொண்டிருந்தார்கள் என்று உறுதிப்படுகின்றது. மேலே கூறியபோந்த காரணங்களால் பிங்கலந்தை கூறிய வைசியர் தமிழ் வேளாளரல்லர் என்று நன்கு புலப்படுகின்றது

திருவள்ளுவனார் ஒப்புயர்வில்லாத தமது திருக்குறளில்

"சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர்"—என்றும்

கம்பர் தாம் பாடிய ஏரெழுபதில்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்வாரெனநேயித் தொல்லுலகில்
எழுதுண்ட மறையனறோ விவருடனே யியலுமீது
பழுதுண்டோ கடல்சூழ்ந்த பாரிடத்திற் பிறந்தோர்க்கே
என்றுங் கூறியிருக்கின்றார்கள்.

இதனால், தலைமை பெற்ற வேலை உழவொன்றே யென்றும் அதைக்கொண்டு வேளாளரே தலைமை பெற்றோர்களென்றும் பிறர் தொழுதுண்டு வாழ்வோர் என்றும் விளங்குகின்றபடியாலும், ஆரியர் நாற்குலத்தில் மூவகை மக்களுக்கும் ஏவல் செய்வோரே சூத்திரர் என்று கூறுகின்றபடியாலும் தலைமை பெற்ற உழவோர் சூத்திராகாரென்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது.

தமிழ் நாட்டில் பழமையாய்த் தலைமையுஞ் சீருஞ் சிறப்புமெய்தி வாழ்ந்துவரும் வேளாளர் நீர்வளமும் நிலவளமும் பொருந்திய மருத நிலத்தில் பலவகைப் பயிர்செய்து ஊனுண் கருதாது நல்லுணவருந்தி பல்லுயிர்களைக் காக்கும் பண்புடையாளராய் வாழ்ந்தார்கள். வாழ்ந்து வருகின்றார்கள்.

தமிழ், வடமொழியினின்றும் வந்ததென்று கூறுவது உண்மையாயின் வேளாளர் வைசியர் அல்லது சூத்திரர் என்று கூறுவதும் உண்மையாம். தமிழ் மக்களுக்கு வடமொழிப்பெயர்கள் பொருந்துமா.

வேள் — ஆளர் — வேளாளர்

வேள் — மருதநிலம், நன்றி, விருப்பம், ஆண்மகன் ஈகை, மெய்.

இந்த பேரளவிலேயே இவர்கள் மருத நிலத்தலை மக்கள்என்றும், நன்றி புரிவோரென்றும், யாராலும் விரும்பப்படுகின்றோர் என்றும், பிறரை யாளுந் தன்மையுடையோர் என்றும், வாய்மையும் ஈகையும் உடையோரென்றும் விளங்குகின்றது.

ஆதொண்டைச் சக்ரவர்த்தி வேளாளரை இளங் கோக்களாக்கி (சிற்றரசர்) அவர்க்கேவல்புரியப் பதினெண் குடிமக்களை வகுத்தனர் என்று

"தொண்டைமண்டல வரிசை மூவாறு குடிமக்கள்
சுருதிராண் முதலாகவே, தங்கமிகு நாவிதன்
குயவன் வண்ணலோலை சொன்னபடி யெழுது மோச்சன்,
கண்டகம் மாளர்வகை ஐவர்வாணிபர் மூவர் கந்தமலர் மாலைகாரர்
கலைமீதுசாடோட்டு பாணன்றலைக்கடைக் காவல்புரிபள்ளிவலையன்,

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம்,
சென்னை-600090.



பண்டுமுதல் ஊரான் மறிக்குமிடையன்,
விருதுபல கூறுவீரமுடையான், [மையும்
பதினெண்மர் குடிமக்களனைவருங்காராளர் பணிசெய்து பலமுறை
கொண்டுபெரிவட்டமுங் கட்டியேவருவரிக் குவலய மதிக்கவே தான்
கூறிய கச்சிவா ழேகம்ப ராலயக் குமுதத்தி லிட்ட லிபியே."
இதனால் நன்கு அறியலாம்.

ஒருகாலத்தில் இக்குடிமக்கள் பதினெண் மருள் கருமார் வேளாளர் நிலைமையைக்கண்டு பொருது கலப்பைக்கு வேண்டிய வைகளைச் செய்து கொடுக்க மறுத்ததாகவும் அக்காலத்து உழவோர் அவர் குறும்படக்கியாண்டார்கள்என்றும் கீழ்குறித்த பாட்டால் விளங்குகின்றது.

"குழுவார் குடிமக்க ளானகண்ணாளர் குறும்படக்கி
யெழுவா யமைத்த மநுநீதி யாற்பதி னெண்மரபு
முழுவானரித்துக் கிடந்துவிடாம லுலகுக்கெல்லாம்
வழுவாத மைக்கவும் வல்லதுநீ தொண்டை மண்டலமே"

காப்பாளனென்னும் ஆமூர் முதலியார் மன்னர் பிரானுயச் சிறப்புற்றிருந்தார் என்று காளமேகப்புலவர் சொன்ன

"உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற வொருகோடி
வெள்ளங்காலந் திரிந்துவிட்டோமே—தெள்ளுதமிழ்
ஆமூர்முதலி யரசர்பிரானிங்கிருக்கப்
போமூ ரறியாமற் போய்"

பாட்டால் விளங்குகின்றது.

சில தொண்டைமண்டல சதகப்பாட்டுகளால் ஏகம்பவாண முதலியாரும், திருநின்றையூர் காளத்திவாண முதலியாரும் பல்குன்றகோப வயிரப்ப முதலியாரும் மன்னராய் வாழ்ந்தனர் என்று தோன்றுகின்றது. பழைய காலந் தொடங்கி வேளாளர் தமிழ்மொழி யொன்றே பேசுவாராய் வருகின்றாராயினும் ஆரியர் கலப்பினால் ஒழுக்கத்தில் சிறிது மாறினார்கள். ஆரியர் வருவதற்குமுன் ஆறும் குளமும் ஐஞ்சந்தி மூஞ்சந்திகளும்

காடும் மலையும் மரநீழலும் இவர்களுக்கு இறைவனை வணங்கும் இடங்களாயிருந்தன. இதை திருமுருகாற்றுப்படை

"ஆறுங்குளனும் வேறு பல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்"

என்கிற தொடக்கத்தாலறியலாம். அக்காலத்திருந்த சிறு கோவில்கள் திருப்பரங்குன்ற மலைமேலிருக்கும் குமரன் கோவிலும் திருக்காளத்தி மலையிலுள்ள குடிமித்தேவர் கோவிலும்போலிருந்திருக்கலாமென்று யூகிக்கவேண்டியதாயிருக்கின்றது. ஆரியமக்கள் பெரிதுங் குடியேறிய பின்னர் ஆகமப்படி சோழமன்னர் குயிற்றிய பெருங் கோவில்களிலே வணங்குவாராயினர். இவர்கள் மணம், களவியல் கற்பியல் என்னும் இரண்டு பிரிவுகளுடையது. அறிவிற்சிறந்த தலைமகனுந் தலைமகளுங் கொடுப்பாருங் கொள்வாருமின்றி ஒத்த அறிவும் ஒத்த நலனும் ஒத்த குடியும் ஒத்த குணமும் உடையார் தம்மிற் தெளிந்து நட்புக்கொண்டு பின்னர் பெற்றோர் அறிய மணஞ்செய்துகொள்வது. இதைப்பற்றியே கலித்தொகை, இறையனாரகப் பொருள்முதலிய சங்கநூல்களும் திருக்கோவையாரும் முழங்குகின்றன. திருக்குறளிலும் இதையே விளக்கியருளினர் தேவர். ஆரியர் கலப்பினால் அந்தணருமறை மன்றலெட்டினுள் பிரமமென்னு மணத்தை பிற்காலத்தில் வேளாளர் கைக்கொள்வாராயினர். முற்கூறிய தமிழர் மணத்தை அந்தணர் தமது எண்வகை மணத்துள் மூன்றாவதாய காந்தருவ மணமென வகுத்தனர், அது மன்னருக்காகு மெனவும் கூறினர். முருக்கிழார் வள்ளி நாயகியாரை மணந்தது இவ்வொழுக்கமே.

"வேதநூல் முதலாகி விளங்குகின்ற கலையனைத்து
மோதுவாரெல்லாரு முழுவார்தந் தலைக்கடைக்கே
கோதைவேல் மன்னவர்தங் குடைவளமுங் கொழுவளமே
ஆதலா லவர்பெருமை யாரளக்க வல்லாரே"

என்ற ஏரெழுபதுச் செய்யுளால் உழவோர் சிறப்பு விளங்குகின்றது. தமிழ் எப்படி தனிமொழியோ அப்படியே வேளாளருந் தனித்தமிழ் மக்கள். நாள் செல்லச்செல்லப் பிறமொழிகள் எப்படி தமிழிற் கலந்தனவோ அப்படியே பிறநாட்டு மக்களும் வேளாள

ரோடு கலந்திராவிட சீருஞ் சிறப்புமெய்தினர்கள். வேளாளர் பழமையாகவே ஊனுண் விரும்பாத சுத்த சைவர்கள். வேறு சில மக்களின் கலப்பினால் பின்னர் ஊனருந்தச்சிலர் பழகியிருக்கின்றார் கள். இவர்களுள் ஓதுந் தொழிலைப் பெற்றார் சிலர் ஓதுவாரென்றழைக்கப்படுகின்றனர். பழநியிற் பழமையாய் பூசித்துவந்தோர் ஓதுவார்களே. திருமலைராயருக்கு மந்திரியாயிருந்த கிருஷ்ணையரென்பாரால்தான் அங்கு பிராமணப்பூசை உண்டாயிற்று. இக்காரணங்களால் தமிழ் நாட்டுத் தலைக்குடியாய் சீருஞ் சிறப்புமெய்தி நிணமருந்தா நியமம்பூண்டு ஒழுக்கத்தாலுயர்வெய்தி அறிவினும் உருவினும் அழகெய்தி வழிவழி வருகின்றோர் வேளாளர் என்றறிகின்றோம். இவர்களுக்கு முதல் முதல் கிழார் என்கிற பட்டம் இருந்ததாய்த் தெரிகிறது. பிறகு, பிள்ளை என்றும் முதலியாரென்றும் பட்டம் பெறுவாராயினர். பிறந்ததுமுதல் இறக்கின்றவரை மாப்பிள்ளைபோல் சீருடையராயிருக்கின்றமையால் அவர்களுக்குப் பிள்ளையெனும் பேர் சிறந்து விளங்குகின்றது. தொண்டைமண்டலத்தில் வேளாளர் மன்னர் பின்னராய் முதன்மைபெற்றிருந்ததால் முதலியார் என்னும் பட்டம் பெற்றார்கள். இது

"சீரொன்று தேவர் முதலாத லாற்றில்லை வாழ்முதலி
யாரென்று நாமம் படைத்ததுபோல் மற்றவருமந்தப்
பேரொன்று பெற்றது வேளாண்முதன்மையைப் பெற்றல்லவோ
வாரொன்று பூண்முலையா யெளிதோதொண்டை மண்டலமே"

என்கிற தொண்டைமண்டல சதகப் பாட்டால் விளங்குகிறது

தமிழின் சிறப்புந் தமிழ் நாட்டின் வளமையும் அறிந்து ஆரியர் பலர் இந்நாட்டிற் குடியேறி தமிழ் கற்று பல நூல்கள் இயற்றியருளினார்கள். அதற்காக நாம் அவர்களுக்கு என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழிற் கிலக்கண மியற்றியருளிய அகத்தியர் ஆரியரே. தேவாரம் பாடிய திருஞானசம்பந்தமூர்த்திகளும், சுந்தரமூர்த்திகளும் ஆரியரே. திருவாசகமும் திருக்கோவையாரும்அருளிய மாணிக்கவாசகரும் ஆரியரே, என் தமிழ்ப் பாதகாசிரியரும் அந்தணரே,

# தமிழ் மொழியும்; சைவ சமயமும்.

திருவாவடுதுறையாதீனச் சைவப் பிரசாரகர்
திருவாளர். பொ. முத்தையபிள்ளை யவர்கள்

அன்பர்களே!

இத்தொடர் மொழியானது, தமிழ்மொழி யென்பது யாது, சைவ சமயமென்பது யாது, இவ்விரண்டினையும் இணைத்து அமைத்த நோக்கம் யாதென ஆராயும் வண்ணம் அமைந்துள்ளது. ஆதலால், அம்முறையில் ஆராய்வாம்.

## க. தமிழ்மொழி

இதைப்பற்றி ஆராயுமிடத்து தமிழ்மொழியின் அமைப்பு, தமிழ்மொழியின் பெருமை என இரண்டு பிரிவாக ஆராயத்தக்கதாதலின், அம்முறையே ஆராயத் தொடங்குகின்றேன்.

### தமிழ்மொழியின் அமைப்பு.

ஒரு மொழியானது அம்மொழிக்குரிய சிறப்பு யெழுத்துக்களால் ஆக்கப்பட்டிருக்குமேல் அதுவே இனிமை பயக்கும் சிறப்புடை மொழியெனப்படும். தமிழ்மொழியானது உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்களை முதலாகவுடையது. "உயிரும் உடம்புமாம் முப்பது முதலே" என்பது நன்னூல். இவ்விருவகையினுள் ஒன்றாகிய உயிரெழுத்துப் பன்னிரண்டனுள், பிறப்புவகையால் அகர இகர உகர மூன்றும் சிறந்தன. அகரக்கூறும், இகரக்கூறும் சேர்ந்து எகரமும், அகரக்கூறும் யகரக்கூறும் இகரக்கூறும் சேர்ந்து ஐகாரமும், அகரக்கூறும் உகரக்கூறும் சேர்ந்து ஒகரமும், அகரக்கூறும் வகரக்கூறும் உகரக்கூறும் சேர்ந்து ஔகாரமும் ஒலிக்கும். குறிலின் விகாரமே நெடிலாகும். இனி, மெய்யெழுத்துப் பதினெட்டும், வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படும்.

தமிழ் என்னும் மொழியானது, தகர மகரம் என்னும் இரண்டு வல்லின மெல்லின மெய்களின்மேல் அ. இ. என்ற உயிர்கள் ஏறி இடையின ழகரமெய் சேர்ந்து முடியப்பெற்றிருக்கின்றது. சூழ் என்பது சூழு எனவும், வாழ்தல் என்பது வாழுதல் எனவும், வழங்குதலின், ழகரமெய் உகரச்சாரியை பெறுதற்குரிமையுடையது. எனவே, தமிழ் என்னும் மொழியானது, அம்மொழிக்குரிய மூவகை மெய்களாலும், மூன்றுயிர்களாலும் அமைந்துள்ளது என்பது பெறப்பட்டது. இவ்வாறமைந்த பொருளால் இனிமை தருதல் பற்றியே தமிழ் என்பதற்கு இனிமையென்று பொருள் கொண்டனர் பெரியோர். ஏனைய்மொழிகளைக் குறிக்கும் மொழிகள், இவ்வாறமையவில்லையென்பது ஆராய்வார்க்கு நன்கு விளங்கும்.

இனி, உயிர் மெய் என்னும் இருவகை எழுத்துகளுள், உயிரெழுத்து முன்னும் மெய்யெழுத்துப் பின்னுமாக அமைந்திருப்பது, உயிர் தனித்தியங்கும் ஆற்றலுடையது என்பதனையும், மெய் உயிரோடு கூடியல்லது இயங்காதென்பதனையும் அறிவுறுத்தும். மெய்யென்பது உடல். மெய்யாகிய உயிருக்கு இடமாதல்பற்றி உடல் மெய்யெனப்பட்டது.

## தமிழ்மொழியின் பெருமை.

இத்துணையமைப்பு வாய்ந்த தமிழ்மொழியானது பாண்டியனுக்குச் சுரநோயைத் தீர்த்தது. என்பைப் பெண்ணாகச் செய்தது. ஏட்டை அக்கினியில் வேவாதிருக்கச்செய்தது. ஏட்டை ஆற்றில் எதிர்த்துச்செல்லச்செய்தது. சிவபெருமான் சங்கப்புலவரோடு ஒருவராக அமர்ந்து ஆராயப்பெற்றது. இன்னும், இத்தமிழ் மொழிசெய்த அற்புதங்கள் பலவுள. இத்தமிழ்மொழியின் பெருமையை நோக்கியே,

"கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ

"தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்தும் முதலை
யுண்டபாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக
கண்டதும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்."

என்றனர் திருவிளையாடற்புராண ஆசிரியரும். ஏனைய மொழிகளை இலக்கண வரம்பில்லாத மொழியெனக்கூறிய கருத்தென்னையெனின், கூறுதும். எழுத்துக்கள் தனித்துந் தொடர்ந்தும் மொழியாகிப் பொருளையுணர்த்தும். அவ்வாறு உணர்த்துதற்கேற்ப எழுத்துக்களின் பொதுப் பெயரும் பொருளை யுணர்த்தும் முறைமையில் அமைந்திருத்தல்வேண்டும். பொருள், அழியும் பொருள் அழியாப்பொருள் என இருதிறப்படும். சுட்டிக் காணப்படும் உலகப் பொருள்கள் அழியும்பொருள். சுட்டிறந்து காணப்படும் பதிபசு பாசப்பொருள்கள் அழியாப்பொருள். இந்த அழியாப்பொருளே சிறப்புடையதாகும். இச் சிறப்புடைப்பொருளாகிய பதிபசுபாசம் மூன்றனுள், தமிழ் நெடுங்கணக்கு என்னும் அரிச்சுவடியில் முதலாவதாகக் கூறப்படும் ஹரி:ஓம்நமோத்துசித்தம என்பது பதியையும், அடுத்துநிற்கும் அகரமுதலிய உயிரெழுத்துக்கள் பசுவையும், பின்னின்ற ககரமுதலிய மெய்யெழுத்துக்கள் பாசத்தையும் குறித்தது. ஆதலின், இத்தமிழ்மொழியானது, இலக்கணம் அமைந்துள்ளதெனவும், ஏனையமொழிகளில் இவ்வாறு, பதி, பசு, பாசங்களைக் குறிக்கும் பொருளமைதி யில்லையென்பது ஆராய்வார்க்கு நன்குவிளங்குமாதலின், அவற்றை "இலக்கண வரம்பிலாமொழி" எனவுங்கூறினோமென அறிந்து கொள்க.

ஏனைய மொழிகளினும் முதலாவதாகக் கடவுள்வணக்கத்தைக்குறிக்கும் வாக்கியமும், அதன்பின்னர் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் முறையே அமைந்திருத்தலால், அவை பொருளிலக்கணம் அமைந்துள்ளனவென்று ஏன் கொள்ளக்கூடாதெனின், உயிரெழுத்துக்கள் உயிரைக்குறிக்கும்பெயராலும் மெய்யெழுத்துக்கள் உடலைக்குறிக்கும் பெயராலும் பெயரிட்டு வழங்கப்படவில்லையாதலால், பொருளிலக்கணம் அமைந்துள்ள மொழியென்றல்

கூடாதெனக. அன்றியும், தமிழில், உயிருடையபொருள் உயிரில்லாத பொருள்களாகிய யாவற்றையும், உயர்வாகியசாதி உயர்வல்லாதசாதியென இருவகைப்படுத்தி, அவ்விரண்டனையும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பாலென ஐந்துபால்களுளடக்கி, அப்பால்களைக் காட்டும் விகுதிகளையும் வரையறுத்து, அவ்விகுதிகள் எவ்விடத்தும் பிறழ்ச்சியுறா தமைந்துள்ளன. ஏனைய மொழிகளிலோ, ஆண்பால் ஒன்றன்பாலாகவும், ஒன்றன்பால் ஆண்பாலாகவும், பெண்பால் ஆண்பாலாகவும் இவ்வாறே ஏனையவும் வரம்பின்றி யமைந்திருத்தலின் "இலக்கண வரம்பிலாமொழி" யென்றுரென்றலுமொன்று.

## 2 சைவ சமயம்.

இனி, சைவசயம் என்பதைப்பற்றி ஆராய்வோம். இதனை ஆராயும் முறையில், பதியுண்மை, பசுவுண்மை, பாசவுண்மை, இவற்றின் இலக்கணம் என இம்முறையே ஆராயத்தொடங்குகின்றேன்.

### பதியுண்மை.

காணப்படும் உடலும் உலகும் என்னும் இருவகைப்பிரபஞ்சங்களுந்தோன்றி நின்று அழிதலையுடையனவாதலானும், இப்பிரபஞ்சங்கள் அறிவில்லாத சடப்பொருள்களாதலால் தாமே முத்தொழிலைச் செய்துகொள்ளா வாதலானும், இம்முத்தொழிலைச் செய்வதற்கு இப்பிரபஞ்சங்களின்வேறாய் அறிவுடைய வினைமுதல் ஒன்று வேண்டப்படும். அவ்வினைமுதல் அறிவுடைய உயிரென்று கொள்ளலாமோ வெனின், அவ்வுயிர், உடல் முதலியவற்றோடு கூடினால் தொழிற்படுதலும், கூடவில்லையாயின் றொழிற்படாது சடம்போற் கிடத்தலும் உடையதென்பது, உடல் முதலியவற்றோடு கூடிய சாக்கிரநிலையில் தொழிற்படுதலினும், அவற்றோடு கூடாத மூர்ச்சைநிலையில் தொழிற்பாடுஇன்றிச் சடம்போற்கிடத்தலினும் வைத்தறியக்கிடத்தலின், உடலையின்றித் தொழிற்படாதவுயிர் அவ்வுடலைத் தோற்றுவித்தற்கு வினைமுதலாம் என்று கொள்ளுதல் கூடாது.

இனி, சிருட்டிக்கடவுளாகிய பிரமனே வினைமுதல் என்று கொள்ளலாமோவெனின், பிரமனுக்குச் சிருட்டித்தொழில் சுதந்தரமாயுள்ளதாயின் தன்னுடைய ஐந்துசிரசில் ஒன்று சிவபெருமானால் கொய்யப்பட்டபின்னரும் அவ்வொருசிரசைச் சிருஷ்டித்துக்கொள்ளலாம். அவ்வாறில்லாமையால் சிவபெருமானுடைய ஏவலால் சிருட்டித்தொழில் பிரமனுக்கு உண்டென்பதேயன்றிச் சுதந்தரமாய் இல்லையென்பது பெறப்படும். படவே, அந்தப்பிரமனை வினைமுதல் என்று கொள்ளுதல் கூடாது.

இனி காத்தற்கடவுளாகிய நாராயணனே வினைமுதல் என்றுகொள்ளலாமோவெனின், நாராயணனுக்குக் காத்தற்றொழில் சுதந்தரமாய் உள்ளதாயின், தன்மகனாகிய மன்மதனைச் சிவபெருமான் எரிக்காமற் காத்திருக்கலாம். அவ்வாறில்லாமையால் காத்தற்றொழில் சிவபெருமானுடைய ஏவலால் நாராயணனுக்கு உள்ளதென்பதன்றிச் சுதந்தரமாயில்லையென்பது பெறப்பட்டு, பிரபஞ்சத் தோற்றத்திற்கு அவன் வினைமுதல் என்றல்பொருந்தாது.

இவ்வாறு, உயிர்களும் உயிர் வர்க்கத்துட் பிறந்த பிரம விட்டுணுக்களும் பிரபஞ்சத் தோற்றத்திற்கு வினைமுதல் ஆகாமை பெறப்படவே, எது எதனில் ஒடுங்குமோ அது அதனில் இருந்து தோற்றும்; கடம் மண்ணில் ஒடுங்கித் தோற்றுவதுபோல என்னும் நியாயத்தால், அனைத்தையும் ஒடுக்கிய சங்காரக் கடவுளாகிய சிவபெருமானே மீள அனைத்தையும் தோற்றுவித்தற்கு வினைமுதலாம் என்பது பெறப்படும்.

## பசுவுண்மை.

இவ்வாறு, காணப்பட்ட உடல் உலகம் என்னும் இருவகைப் பிரபஞ்சங்களுள், உடல்தோறும் நான் என்னும் சொல்லிற்குப் பொருளாய் நிலைபெற்று நின்று உலகப் பொருள்களை எனதென அபிமானித்து நிற்பது உயிரெனப்படும்.

ஆகாயமொன்றே கடமுதலியவற்றால் வளைபட்டு கடாகாய முதலிய பெயரால் வழங்குமாறுபோல, பிரமமொன்றே உடல்தோறும் வேறுவேறாய் விளங்குவதன்றி உயிரென வேறொன்றில்லை

யென்பர் ஒரு சாரார். கடமுதலிய பொருள் வரைப்பட்ட காலத்தும் ஆகாயம் வேற்றுமையுறுவதில்லை. உயிரோ உடல்தோறும் வேறு வேறான சுகதுக்க மோகங்களை உடையனவாதல் அநுபவம். ஆதலால், நிருவிகாரமான பிரமத்திற்கு விகாரமுண்டென்றல் பொருந்தாதாதலின், அவர்கூற்று மறுக்கப்பட்டு பிரமத்தின் வேறாய் உயிருண்டென்பது சித்தம. அன்றியும் நிருவிகாரமான பிரமம் எதற்காக விகாரம் உற்றது, எப்பொழுது விகாரமுற்றது என்பது முதலிய வினாக்கள் நிகழுமாதலின், விளையாட்டாக விகாரமுற்றது அனாதியே விகாரமுற்றது, என்பது முதலாக அவர் விடைகூறின் முன்னர் விளையாட்டாக விகாரமுற்றதுபோல, விகாரத்தினின்று நீங்கியபின்னரும் விளையாட்டாக விகாரமுறுமெனப்பட்டு நீங்குதற்காகச் செய்யுஞ் செயல்களெல்லாம் வீண் செயல்களாய் முடியும். அனாதியே விகாரமுற்றதென்னின், அனாதியே நிர்விகாரமுடையது பிரமம் என்றல் பொருந்தாதாய் முடியும். ஆகவே, எவ்வாற்றானும் பிரமமே உடல்தோறும் வேறுவேறாய் உயிர்போல நிற்குமென்றல் பொருந்தாதென்பது கடைப்பிடிக்க.

நூல்களில், கடாகாய மகாகாய வுவமையைப் பிரமத்திற்குஞ் சீவனுக்குங் கூறிய கருத்து, பாமுத்திநிலையில் சீவான்மா பரமான்மாவோடு ஒற்றுமைப்படச் சேர்தல் மாத்திரைக்கு ஒருபுடையுவமையாகக் கூறப்பட்டதேயன்றிப் பிறிதன்று. (தொடரும்)

———:():———

## நெல். —

நெல் புல்லினத்தைச் சேர்ந்தது. தாவரங்களை முக்கியமான இரண்டு வகுப்புக்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒன்று மரம் ஒன்று புல். உட்காழுடையன வெல்லாம் மரமெனவும், புறக்காழுடையனவெல்லாம் புல்லெனவும் வகுக்கப்பட்டிருக்கின்றன. காழ்-வைரம். அதாவது கடினமான பாகம். கடினமான பாகத்தை உட்புறத்தே யுடையன மரவர்க்கத்தைச் சேர்ந்தவை; கடினமான பாகத்தை வெளிப்புறத்தேயுடையன புல்லினத்தைச்சேர்ந்தவை. அன்றியும் மரவர்க்கத்திற்குக் கிளைகளும் இலைகளும் உண்டு. அவை புல்

வினத்துக்குக் கிடையா; அவை மடல்களைமாத்திரமேயுடையன மா, புளி, இலுப்பை, வேம்பு, முருங்கை, நுணா, வேல், அத்தி ஆல் அரசு, புங்கு, வேங்கை, அடப்பை, தில்லைமுதலிய பெரு மரங்களும், மருத்தோன்றி, குலோபகம், அவுரி, கொளிஞ்சி, ஆமணக்கு, துளசிமுதலிய சிறு செடிகளும், கையாந்தரை, குப்பைமேனி பொன்னாங்கண்ணி, முதலிய பூண்டுகளும் மரவர்க்கத்தைச்சேர்ந்தவை. தென்னை, பனை, ஈச்சை, தாழை, சம்புதாணல், வரகு, கம்பு கேழ்வரகு, தினை, சோளம், நெல், புல், கோரை, முதலியவைகள் புல்லினத்தைச் சேர்ந்தவை. இவைகளல்லாமல் கொடியாய்ப்பட ருகிறவைகளில் மரவர்க்கத்தைப்போல் கிளை இலைகளை யுடையனவாயிருப்பன, மரவர்க்கத்தைச் சேர்ந்தவை. புல்லினத்தைப் போல் கிளை இலையின்றி மடல்களை மாத்திரமுடையனவாயிருப்பன புல்லினத்தைச் சேர்ந்தவை. இரண்டு வர்க்கத்தின் லட்சணங்களும் கலந்திருப்பதும் சிலவிருக்கும். அவைகளை மிகுதிபற்றி ஒன்றில் அடக்கலாம். மரவர்க்கத்தின் பலனாகிய பழங்களே மனிதனுக்கு உரித்தான ஆகாரமேனும், அவைகளை நெடுநாளைக்குக் கெடாமல் வைத்திருக்கமுடியாமையாலேயே புல்லினங்களின் பலனாகிய தானியங்களையும் கொஞ்சங் கொஞ்சமாய் ஆகார வர்க்கத்தில் சேர்த்து இப்போது பழங்களை முழுவதும் விட்டுத் தானியங்களே முக்கிய ஆகாரமாக வந்துவிட்டது. அவ்வித தான்யப்பயிர்களில் நமது நாட்டில் பரவி நிற்பது நெல். அதுவே நமது நாட்டுக்கு முக்கிய ஆகாரப்பொருள். ஆகாரப்பொருள் மாத்திரமல்ல. நமது நாட்டு ஐஸ்வரியப் பொருளும் அதுவே. சீவனாதாரத்துக்கு இன்றியமையாததான ஆகாரப்பொருள் அகத்தேயின்றி வேறு பொருள்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பிவிற்று அவைகளின் விலையைக்கொண்டு சீவனாதாரத்துக்கு வேண்டிய ஆகாரப் பொருளை வாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிற சில அத்வான தேசங்களைப்போலன்றி நமது தேசம் உயிர்க்காதாரமான ஆகாரப் பொருளை அகத்தேயுடையதாயிருப்பது நமது நல்லதிர்ஷ்டமே யெனினும் பகட்டுச் சாமான்களைக்கொண்டுவந்து நமது நாட்டில் விற்கும் பிறநாடுகள் ஐஸ்வரியத்தில் மிகுந்ததாயும், சீவனாதாரத்துக்கு வேண்டிய ஆகாரப் பொருளை பிறநாடுகளுக்கு விற்கும்

நமது நாடு ஐஸ்வரியத்தில் குறைந்ததாயுமிருப்பது நமது துரதிர்ஷ்டமேயாகும். இதற்குக் காரணபூதர்கள் நமது சுயகாரிய துரந்தரோத்தமர்களேயாவர். அதன் விவரம் வேறு கூறுவோம். ஆனால் அவர்கள் தங்கள் சுயலாபத்தை யுத்தேசித்துச் செய்யுந்தொழில்களாலும் அதற்கு ஒத்திருக்கும் அரசாங்கத்தினாலும் விவசாயம் க்ஷீணதசையுடைந்து விட்டதனால் நமது நாட்டு ஆகார ஐஸ்வரியப் பொருள் விருத்தி குன்றிப் போய்விட்டது. ஆகையால் விவசாயத்தை விவசாயிகளே தங்கள் சொந்த முயற்சியால் அபிவிர்த்தி செய்யவேண்டும். விவசாயிகள் உதவியற்றும் பலவித அசௌகரியங்களாலும் நெருக்கடிகளாலும் அலைப்புண்டு ஒன்றும் முடியாமல் தியங்கி நிற்பதால் சரியானபடி வேலைசெய்து பலனடையமுடியவில்லை. சாஸ்திரோக்தமான உபாயங்களை விவசாயத்தில் பிரயோகிக்க நினைக்கக்கூட முடியவில்லை. ஆகையால் தற்போது அநுபவசித்தமாய்த் தெரிந்தவைகளையாவது ஒழுங்குடன் செய்வதற்குப் போதிய விசாரணை உண்டாகும் பொருட்டு நெற்பயிர்ச் செய்கையில் அநுபவமுள்ள சில நடைமுறைகளை இதில் சொல்லலாமென்றெண்ணி எமக்குக் கிடைத்தவரையில் நெற்பயிர் செய்யவேண்டிய அனுபவமுறைகளை வெளியிட முயல்கிறோம்.

அதற்கு நெடுநாளாய் நெல் பயிர்செய்துவரும் மிராசுதார்கள் இதுவரையில் தங்கள் அனுபவத்தில் கண்ட விவரங்களை எமக்கு எழுதி யனுப்பினால் அதை இப்பத்திரிகையில் பிரசுரித்து அநுபவமில்லாத மற்றவர்களும் பார்த்து அப்படியே செய்து நற்பலனடையும்படி செய்யலாம்.

நெற்களில் பலவிதமுண்டு. குருவை, சம்பா, கார், கல்லுண்டை, தில்லை, ஒட்டன், முதலியவைகளும் அவைகளின் உட்பிரிவுகளும் உண்டு. அவைகள் ஒவ்வொன்றுக்கும் விதை எப்படி தயார் செய்வது என்பதிலிருந்து நாற்றங்கால் வேலை, வயல் வேலை, நடவு, களை, முதலிய எல்லா வேலைகளையும் அறுப்புகண்டு முதல் எரு மாமத்து வரையில் ஒன்றுவிடாமல் அனைத்திலுமுள்ள ஒவ்வொரு விவரத்தோடும் எழுதியனுப்பக் கோருகிறோம். அல்லது ஒவ்வொன்றை ஒவ்வொருவர் எழுதினாலும் சரிதான். நாட்டுத்துரோகிகள்

ஒழிந்து, நாடு சீர்பெற்று விவசாயம் நேர்மை பெறக்கூடிய காலம் வரும் வரையில், அனுபவத்திற்கண்ட முறைகளின்படியாவது எல்லாரும் நெல்பயிர்செய்து வரட்டுமென்ற உத்தேசத்தில் இப்படிச்செய்யலாமென்று நினைத்திருக்கிறபடியால் அதில் அனுபவமுள்ளவர்கள் தங்களுக்குத்தெரிந்ததை எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். "குடியரசு" (காரை).

---

# அறநெறியும் தவமாண்பும்.

பண்டிதை ஸ்ரீமதி ந. பத்மாசனி அம்மாள் அவர்கள்.

உலகின்கண்ணே தோற்றுகின்ற பல்வகைப் பிறவிகளுள், மானுடப்பிறவியே மிகச்சிறந்தது.

> "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
> யாதினுமரிதரிதுகாண்"

எனத் தாயுமான சுவாமிகளும்,

> "அரிதரிது மானிடராதலரிது"

என ஔவை பிராட்டியாரும் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றனர். கிடைத்தற்கரிய இந்த மானிட சென்மம் எடுத்தவர்களுக்கு இன்றியமையாதனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்கள் இருக்கின்றன. இந்த நான்கு புருஷார்த்தங்களுள் அறமே ஏனைய மூன்றினுஞ் சிறந்தது. (அறம் தருமம் என்பன ஒரு பொருட்சொற்கள்.)

> "தருமமே உலகம் போற்றச் சகல காரணமதாகும், தருமமே தனைவேட்டோர்க்குச் சௌக்கியமனைத்து நல்கும், தருமமே யழியாதென்றுந் தாபரமாகி நிற்கும், தருமமே முத்திசேருஞ் சாதனமென்றுட் கொள்வான்"

எனப் பெரியோரும் பணித்திருக்கின்றனர். ஆதலால் நாம் தருமநெறி கடைப்பிடித்தொழுகுதலே முக்கிய கடமையாகும்.

கரும நெறியை ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூன்றாய்ப் பிரிக்கலாம். இவற்றுண் முதற் கூறப்பட்ட ஒழுக்கமே மிகச் சிறந்தது. வழக்குத் தண்டம் என்னும் இரண்டையும் உலக இயற்கையால் நன்குணரலாம். ஒழுக்கம் என்பது சாஸ்திரங்களாலும் பெரியோர் போதனையினாலுமே யறியக்கிடந்த தொன்றாம்.

ஒழுக்க நெறியாவது விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம். இவ்வொழுக்க நெறியில் வாழ்பவனே கடவுளுடைய அருளைப்பெறுவான். இவனே யோகி, இவனே இம்மை மறுமை இன்பங்களுக்குரியவன்.

இதனாலன்றோ,

"பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்"

எனத் திருவள்ளுவ நாயனாருங் கூறியுள்ளார்.

ஈகை, அன்பு, கொல்லாமை, உண்மையுரைத்தல், பெரியோரைப்பேணல் முதலான யாவும் ஒழுக்கச் செயல்களே இறைவனுக்குத் தகுந்த மெய்யடியாரான நாயன்மாரெல்லாம் ஒழுக்கநெறி நின்றே மேலான பதவிகளைப்பெற்றனர். நாம் நமது இல்லங்களிலிருந்தே உய்வடையத்தக்க நல்ல வழியிருக்க அங்குமிங்குமலைந்து வருந்தவேண்டிய தெற்றிற்கு. இல்லத்திலிருந்து கொலை, களவு முதலான பாதகங்களை யெல்லாஞ்செய்துவிட்டு காசியாத்திரையும், சிதம்பர யாத்திரையும் செய்தாற் பயனுண்டாகுமா?

நம் தேசத்திலே சிலர் பாவம் நீங்க வேண்டுமென்றோ அன்றி வேறெப்பயன் கருதியோ அறியேம். கந்த சஷ்டி, சிவராத்திரி, நவராத்திரி, முதலான பற்பல விரதங்களையு மனுஷ்டிக்கின்றனர். விரதம் நிறைவேறிய அடுத்த தினமே விரதம் அனுஷ்டித்தமையால் உடம்பு வாடிப்போயது என்று ஆடு, கோழி, முதலான சீவப்பிராணிகளை வதைத்து அதன் ஊனைப் புசிக்கின்றனர். இன்னோர் குளிக்கப்போய்ச் சேறு பூசி யாங்குப் புண்ணியந் தேடப்போய்ப் புண்ணியத்திலும் அதிகமான பாவத்தைச் சம்பாதித்தலேயன்றி வேறெந்த நற்பயனைப் பெற்றனர்?

இன்னும் நம் தேசத்தவர்களிலனேகர் தேவாலயங்களில் தாசிகள் நடனம், வாண வேடிக்கை முதலான பற்பல வீணான வேடிக்கைகளுடனே திருவிழா நடத்துகின்றார்கள். தீர்த்த யாத்திரை தலயாத்திரை செய்கின்றார்கள். இவைபோன்ற பிற கருமங்களையுஞ் செய்கின்றார்கள். ஆனால் வீட்டில் பசியினால் மிகமிக வருந்தி ஒரு யாசகன் வந்தால் அவனை வாசலினுள்ளும் புகுதவிடாமல் வெளியே துரத்திவிடுகின்றார்கள். ஸ்நானஞ்செய்து விபூதிக் குறி தேகமெங்கும் பிரகாசிக்க, சிவாலயங்களுக்கு மிக்க பரிசுத்தத்துடன் செல்லுகின்றார்கள். ஆனால் வழியில் ஒரு வயோதிகன், நோயாளி அன்றி ஒரு மிருகம் அபாயமான நிலையிலிருக்கலைக் கண்டால், அடி அம்மா, நான் சிவாலயத்துக்குப் போய் சுவாமி தரிசனஞ்செய்ய வேண்டும் இந்த இடத்துக்குப் போனாலும் சுவாமி தரிசனம் தடையாகப்போய்விடும் என்று சொல்லிக்கொண்டே தூர விலகிப்போகின்றார்கள். அந்தோ! இவைகளெல்லாம் ஒழுக்க நெறியாகுமா? கடவுளோ விருப்பு வெறுப்பு அற்றவர். எல்லாம் நிறையப்பெற்றவர். எல்லாம் தாமேயாகியுள்ளவர். அன்பே உருவமாகவுள்ளவர். ஆன்மாக்கள் தோறும் வியாபித்திருப்பவர். இத்தன்மையார், இவ்வுருவர், இவ்வண்ணத்தர் என்று காட்டுதற்கரியவர். நாம் அவருக்குச் செய்யும் தொண்டுகளை நம்முடைய அன்புக்காக ஏற்றுக்கொள்வாரே யன்றி அவருக்கே அவைகளின்மேல் விருப்புமில்லை வெறுப்புமில்லை. ஆகலால் அக்கடவுள் உறைவிடமாகக்கொண்டிருக்கும் கோயில்களான உயிர்களெல்லாம் பசியாலும் பிறவற்றாலும் வருந்த, கடவுளுக்கு அமுதை நிவேதித்தும், அலங்காரத் திருவிழாவை நடத்தியும் வாணவேடிக்கை தாசிகள் நடனம் முதலானவற்றைச் செய்தும் பதிகருமம் புரிந்தால் கடவுளுக்கு விருப்பமாயிருக்குமா? ஒரு உயிர் வழியிற் கிடந்து உதவியின்றி வருந்த அதைக்கண்டு கொண்டு திருக்கோயிலுட் சென்று அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்களும் பிறவுஞ் செய்யக் கடவுளுக்குப் பிரியமாயிருக்குமா? பசுதருமமே, பதிதருமம் என்பது கடவுள் வாக்கு. போலிவணக்கத்துக்குக் கடவுள் இரங்கமாட்டார். அன்பினாற்செய்யும் செயல் எதுவோ அதற்கே கடவுளிரங்குவார். ஒரு உயிர் வருந்து வதைக்கண்டு அதற்காக நாமும் வருந்தி

நம்மாற் செய்யத் தகுந்த உதவியை அந்த உயிருக்குச்செய்தால் அந்த உதவி கடவுளையே சேரும். இல்லத்திலே பிதா மதா முதலானோர் பசியால் வருந்த, மகன் திருச்செந்தூர்த் திருமடத்திலும் சிதம்பர க்ஷேத்திரத்திலும் அன்னதானம் கொடுத்தால், அது அறச்செயலாகுமா?

ஈங்கு கூறியவற்றால் விரதமனுஷ்டிக்கவுங் கூடாது, திருக்கோயிலுக்குப் போகவுங் கூடாது, தீர்த்தயாத்திரை செய்யவுங் கூடாது, திருவிழா நடத்தவுங் கூடாது, இன்ன பிறவற்றைச் செய்யவுங்கூடாது என யான்கூறவில்லை. இவைகளெல்லாம் அறச்செயல்களே. ஆனால் இவைகளைச் செய்யும்போது அறநெறி கடைப்பிடித்துச் செய்தாலே இவைகள் அறச்செயலாகும். இவ்வற நெறியின் பெருமையைப்பற்றி ஒரு கதையுளது. அது வருமாறு:—

முன்னொரு காலத்திலே ஒரு பிரமசாரியானவன் காட்டிற்குச் சென்று ஓர் ஆலமரத்தின்கீழ் தவஞ்செய்துகொண்டிருந்தான். அவன் தவஞ்செய்யும்பொழு அம்மரத்திலிருந்த ஓர் கொக்கானது அப்பிரமசாரியின்மீது எச்சமிட்டது. அதையுணர்ந்த பிரமசாரி கோபத்துடனே அந்தக் கொக்கைப் பார்த்தான் உடனே அந்தப் பட்சியெரிந்து சாம்பராயது. அதைக்கண்ட பிரமசாரி என்னுடைய தவ மகிமையாலன்றோ இந்த கொக்கு எரிந்து சாம்பராயது ஆதலால் இனிமேல் நாம் காட்டைவிட்டு நாட்டுக்குச்சென்று நமக்குவேண்டியவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு சுகமாய் வாழலாம். நாட்டிலுள்ளார் என் எண்ணப்படி செய்யாது விட்டால், இக்கொக்கின் கதியே யவர்களுக்கும் கிடைக்கும், ஆகலால் அவர்கள் எனக்கு அஞ்சி என் எண்ணப்படியே செய்வார்கள் என்று தன் உள்ளத்தில் நினைத்துகொண்டு நாட்டுக்குச் சென்றான்.

இவ்வாறு நினைத்துக்கொண்டு சென்ற பிரமசாரி பசியினால் ஒரு பதிவிரதையின் வீட்டுக்குச்சென்று அன்னங்கேட்டான். அச்சமயத்திலே அவளுடைய நாயகன் வீட்டுக்கு வந்தான். தனது நாயகன் வருதலைக்கண்ட இந்தப் பதிவிரதையானவள், பிரமசாரியை யிருக்கச் சொல்லிவிட்டு தன் நாயகனுக்கு வேண்

டிய பணிவிடைகளியற்றச் சென்றாள். அப்பொழுது, அந்தப் பிரமசாரிக்குக் கோபமுண்டாகி இந்த நங்கைக்கு நாசகாலம் வந்துவிட்டது. கொக்கின் கதிதான் அடையப் போகின்றாள் என்று நினைத்துக்கொண்டு அவ்விடத்திருந்தான்.

இவன் இப்படியிக்கத் தன் நாயகன் பணிவிடை பார்க்கச்சென்ற பதிவிரதையானவள் தன் கடமையை முடித்துக்கொண்டு வெளியே வருதலும் பிரமசாரி சீற்றத்துடன் அப்பதிவிரதையை நோக்கினன். பிரமசாரியினுடைய உள்ளக்கருத்தை யுணர்ந்து புன்னகைசெய்து "ஓகொங்கணரே, என்னை ஆலமரத்துக் கொக்கென்று நினைத்தீரோ, உமது எண்ணம் இங்கு நிறைவேறமாட்டாது. நான் எனது நாயகனுடைய பணிவிடை பார்க்கச்சென்றிருந்தேன். அதுவே யென்னுடைய முதற்கடமை. அதனைச் செய்து முடித்தபின்பே வேறெதையுஞ் செய்வேன். ஆதலால் உம்முடைய எண்ணத்தையினிமேல் விட்டுவிடும்" என்றாள்.

இதைக்கேட்ட பிரமசாரி அப்பதிவிரதையை வணங்கி நாணத்தினாற் றலைகுனிந்து அப்பதிவிரதையைநோக்கி "அன்னையே, எனது எண்ணத்தை நீரறிந்தவிதம் என்ன" வென்று கேட்டான். அதற்கு அந்தப்பதிவிரதையானவள் "யான் உன்னைபபோற் காட்டிற்சென்று கடுந்தவம்புரியவில்லை. அறநெறி கடைப்பிடித்தொழுகியவதனால் உன்எண்ணத்தை யுணரும்சக்தி யெனக்குண்டாயது நீயும் ஞானத்தைப்பெறவிரும்பினால் இவ்விடத்திலிருந்து நெடுந்தூரத்திற்கப்பால் ஒருவேடரிருக்கின்றார்; அவரிடத்திற்குச் சென்றால் அவர் உனக்கு ஞானமார்க்கத்தை உபதேசிப்பார்" என்றுரைத்தாள். உடனே அந்தப்பிரமசாரி அப்பதிவிரதையை நமஸ்கரித்துக்கொண்டு வேடரிருக்கின்ற இடத்தைநோக்கி விரைந்து சென்றான். அந்தச்சமயத்தில் இறைச்சிகளைத் துண்டுபண்ணிக்கொண்டிருந்த வேடனானவன் பிரமசாரியைக்கண்டு "அந்தப்பதிவிரதை உன்னை இங்கனுப்பினளா" என் வினவினன். அதற்கு அந்தபிரமசாரி இறைச்சி வெட்டுபவனுக்கு இந்தஞானம் எப்படி வந்ததென்று தன் உள்ளத்திலதிசயப்பட்டு மௌனத்துடன் நின்றான். இவனுள்ளக்கருத்தையுமறிந்த வேடன் றன் வேலையை முடித்துப்

பிரமசாரியை யழைத்துக்கொண்டு வீட்டினுட்சென்று தன் தாய் தந்தையரை வணங்கி அவர்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்து முடித்துவிட்டு, பிரமசாரியை நோக்கி "உன்னை அந்தப்பதிவிரதை யனுப்பிய காரணம் யானுணர்வேன். நீ உன் தாய்தந்தையரை விட்டுக் காட்டினுட்சென்று தவஞ்செய்தலால் பயனில்லை. உன் தாய்தந்தையர்க்குச் செய்யவேண்டிய குற்றேவல்களை யினிது செய்வாயானால் உண்மைஞானத்தை யடைவாய் என உரைத்தனன். அதைக்கேட்ட பிரமசாரி "சுவாமி! இவ்வித மேலான ஞானத்தை யுடைய நீர்இறைச்சி அறுத்தலாகிய கொலைத் தொழிலைச்செய்யும் நியாயமென்ன" என்று கேட்டான். அதற்கந்தவேடன் "இதுஎன்னுடைய குலத்தொழில்; இதுபற்றி யெனக்கோர்கேடுமில்லை" எனஉரைத்தான். அதைக்கேட்ட பிரமசாரி சிந்தை தெளியப்பெற்றுத் தன் இல்லத்தையடைந்து அறநெறி தனைப்பிடித்தொழுகி உத்தமனானான்.

ஆதலால் நாம் அறநெறியே தவநெறியாய்க்கொண்டுநீதிபலவுந் தன்வடிவமாயுள்ளவரும் புலையுங்கொலையுங் களவுமில்லாப் புனிதத் தவத்தோர் தொழுதேத்து கின்றவருமான கடவுளை வழிபட்டு உய்வோமாக. (இந்து சாதனம்)

---

# உழவுத்தொழில்

:():

## அஹிம்சா தர்மத்துக்கு மாறுபட்டதா?

---

மகாத்மா காந்தியின் கருத்து.

"நவஜீவன்" பத்திரிகையின் வாசகர்களில் ஒருவர் மகாத்மா காந்தியைப் பின்வருமாறு கேட்டிருந்தார்:—

"விவசாயம் தூய்மை பொருந்திய ஒரு யக்ஞமென்றும், அதுவே உண்மைத்தொண்டு என்றும் "நவஜீவ"னில் எழுதியிருக்கிறீர்கள். தவறுதலாய் ஓர் எறும்பின்மீது கால்வைத்து விட்டால் நமக்

குப் பெருந் துன்பம் உண்டாகிறது. ஆனால் உழவுத்தொழில் செய்யும்போதே ஆயிரக்கணக்கான சிறுஜந்துக்கள் நாசமாகின்றன இயற்கையில் இவ்வளவு ஹிம்சைக்கு இடந்தரும் தொழிலில் ஒருவர் எவ்வாறு ஈடுபடுவது? இதைவிடப் பிச்சைஎடுத்தாவது பிழைத்தல் நல்லதில்லையா? எனக்கு விவசாயத்தில் அதிக பிரியமுண்டு. ஆனால் மேற்கண்ட விஷயத்தை யோசிக்கும் போதும், உழவு மாடுகளை ஓட்டுவதற்கு உபயோகிக்கப்படும் தார்க்கழிகளைப் பார்க்கும்போதும் எனக்கு பயமுண்டாகிறது.''

இதன்பேரில் மகாத்மா அளித்துள்ள பதிலின் சாராம்சம பின வருமாறு:—

உழுது பயிர் செய்யும்போது கணக்கற்ற சிறு பிராணிகள் அழிந்துபோவது உண்மையே. நாம் மூச்சுவிடுகையிலும் இவ்வாறே கணக்கற்ற ஜீவராசிகள் நாசமாகின்றன. இதற்காக நாம் தற்கொலைசெய்துகொண்டு உடம்பை அழித்துவிடுகிறோமில்லை. இவ்வாறே விவசாயம் நாம் செய்யாமலிருந்துவிட்டால் மட்டும் அதை அழித்துவிடமுடியாது மனிதன் மண்ணிலிருந்து பிறந்தான். அவனுடல் மண்ணாலாக்கப்பட்டது. மண்ணின் சாரத்தைக்கொண்டு உடலை வளர்த்து வருகிறான். விவசாயத்திலுள்ள ஹிம்சையிலிருந்து நிவர்த்தி பெறுவதற்காக ஒருவன் பிச்சையெடுத்துப் பிழைத்தால் அவன் இரண்டு குற்றங்கள் செய்தவன் ஆவான். அவன் பிச்சையெடுத்துப் பெறும் உணவு யாரேனும் உழுதொழில் செய்தவன் பயனாகவே வந்தது. ஆகவே, விவசாயத்திலுள்ள ஹிம்சைக்கு அவன் உடந்தைப்பட்டே யிருக்கிறான். அத்துடன் சோம்பலை வளர்த்த குற்றமும் அவனைச்சாரும்.

நமது உடலைக்காப்பாற்றுவதில் உள்ள ஹிம்சையையும் நாம் விலக்கமுடியாது. இதனால் அது ஹிம்சையில்லாமல் போய்விடவில்லை. ஹிம்சை ஹிம்சைதான். ஆயினும் இதில் குற்றம், குறைவு, ஞானம், பக்தி, முதலிய சாதனங்களைக்கொண்டு மனிதன் இந்தப் பாவத்திலிருந்து விடுபட்டு மோட்சமடைதல் கூடும். மனிதனுக்கு அவன் உடலே விடுதலைக்கும், பந்தத்திற்கும் சாதனமாயிருக்கிறது விவசாயமும் இவ்வாறே லட்சாதிபதியாய் ஆகவேண்டுமென்ற

நோக்கத்துடன் விவசாயத்தில் ஈடுபடுவோனுக்கு விவசாயமே பந்தமாகிவிடுகின்றது. மற்று, ஜீவனோபாயத்திற்காக மட்டும் உழவுத் தொழிலைக் கைக்கொண்டோனுக்கு அதுவே மோட்சசாதனமாகின்றது. உலகில் எல்லாவகைக் கருமத்திலும் ஓரளவு ஹிம்சை உண்டு. முத்துக்குளித்தல், பட்டுத்தொழில், தங்கம் எடுத்தல் முதலிய தொழில்கள் மனிதன் உயிர் வாழ்வுக்கு இன்றியமையாதனவல்ல. ஆகையால் விவசாயத்தைவிட இவை அதிகக்குற்றம்பொருந்தியவை. எப்பக்கம் திரும்பினாலும் ஹிம்சை நிறைந்த இவ்வுலகில், அஹிம்சா தர்மத்தை முதன்முதல் எடுத்தோதிய மகானுக்கு வணங்குதல் செய்வோம்.

ஓர் எறும்புக்கும் தீங்குசெய்யாமல் இருப்பது முதன்மையான கடமையேயாகும். ஈவிரக்கமின்றிப் பெருமிதத்துடன் ஜீவராசிகளை மிதித்துச் செல்பவன் வேண்டுமென்றே பாவஞ்செய்தவனாகிறான். உழவுத்தொழிலில் வேறு வழியின்றி ஹிம்சை செய்பவனை இவனுடன் ஒப்பிடமுடியாது. நூற்றுக் கணக்கான விவசாயிகள் தங்கள் எதிர்ப்பட்ட ஜந்துக்களை காப்பாற்றுகிறார்கள். அவர்களிடம் கர்வமில்லை. உலகத்தில் 100-க்கு 90 பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த பூமிக்கே விவசாயம் ஜீவாதாரமானது. ஆதலின் தர்ம புத்தியுள்ளவர்கள் மற்ற அநாவசியமான தொழில்களைக் கைவிட்டு இதை மேற்கொள்ளலாம்.

தார்க்குச்சியைப்பற்றிய ஆட்சேபம் எல்லாவிவசாயிகளுக்கும் பொருந்ாது. விவசாயத்திற்கும் தார்க்குச்சி இன்றியமையாததன்று. அநேகர் கால்நடைகளைத் தங்களுடைய சொந்தக் குழந்தைகளைப்போல் பாவித்து அருமையுடன் வளர்த்துவருகின்றனர்.

---

## அறிவிப்பு.

முதல் பத்திரிகை மிகவும் அவசரமாக அச்சிட்டதால் சில பிழைகளிருக்கலாம். அதனை நேயர்கள் பொருத்தருள்வார்களாக.

## நீதி மொழி.

மனிதர்களுக்குப் பொருளை ஆண்டவன் கொடுத்திருப்பது தருந்தவர்களுக்கு உபகாரஞ் செய்தற்பொருட்டு.

உ

தேவகோட்டை

சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்து வெளியீடு.

1 சிவார்ச்சனா சந்திரிகை, இது ஸ்ரீ அப்பைய தீக்ஷிதரால் இயற்றப்பெற்றது. ஆத்மார்த்த பூசையை இனிது விளக்குவது. நிர்மால்ய போசனத்தை நிர்ணயிப்பது. (நாகரம்) ரூ. க—௰—0

2 ஷை தமிழ் மொழி பெயர்ப்பு ,, க—அ—0

3 அஷ்டப்பிரகரணம். இதில் தத்துவப்பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், இரத்தினத்திரயம், போககாரிகை, நாதகாரிகை, மோக்ஷகாரிகை பரமோக்ஷ நிராசகாரிகையென எட்டுப் பிரகரணங்கள் வியாக்கியானத்துடன் உள்ளன (நாகரம்) ரூ. உ—அ—0

4 ஷை தமிழ் மொழி பெயர்ப்பு ,, ௩—௬—0

5 மதங்கபாரமேசுவர ஆகமம் ஞானபாதம் மூலம் மட்டும் (நாகரம்) ரூ. க—௰—0

6 சைவபூஷணம். இது, கிரியாபாத விஷயங்களனைத்தையுந் தொகுத்துக் கூறுவது. கிரந்த மூலமும் தமிழ் வியாக்கியானமும் ரூ. க—௦—0

7 சம்பு பூஜாவிதி (கிரந்த மூலம்) ,, ௰—சா—0

8 சைவசித்தாந்த பரிபாஷை (நாகரம்) ,, 0—அ—0

9 ஷை தமிழ் மொழிபெயர்ப்பு ,, 0—அ—0

10 மிருகேந்திர ஆகமம். ஞானயோக பாதங்கள் விருத்தி, தீபிகை யென்னும் வியாக்கியானங்களுடன் (நாகரம்) ரூ. ரு—0 0

(தபாற் செலவு வேறு) இங்ஙனம்.

காரியதரிசி, சிவாகமசங்கம், தேவகோட்டை.

---

போ. மு. வெளியீடுகள்.

1 சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் ரூ. ௩—அ—0

2 சிவஞான சித்தியார்சுபக்கம் மூலமும் பொழிப்புரையும் இரண்டாம் பதிப்பு, தத்துவ, தாத்துவிக அத்துவப் படங்களுடன் ரூ. உ—அ—0

3 சருவஞானோத்தர ஆகமம், ஞானபாதம் தமிழ் மூலமும் முத்திரத்ந விருத்தி உரையும், வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றுள்ளது ரூ. க—அ—0

4 தசகாரிய விளக்கம் ,, 0—அ—0

(தபாற் செலவு வேறு) இங்ஙனம்,

பொ. முத்தையபிள்ளை,

சிவாகமசங்கம், தேவகோட்டை.